செய்தி வெளியீடு எண்:641 நாள்: 19.12.2014

# செய்தி வெளியீடு

**சென்னையில் , மகளிர் மேளா "கிறிஸ்துமஸ்–புத்தாண்டு–பொங்கல்" மகளிர் சுய உதவிக்குழு உற்பத்திப் பொருட்கள் விற்பனைக் கண்காட்சியினை மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள் தொடங்கி வைத்தார்.**

*****

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் முன்னேற்றத்திற்காகப் பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது மகளிர் திட்டம். மகளிர் சுய உதவிக் குழுவினர் தயாரிக்கும் உற்பத்தி பொருட்களின் விற்பனை வாய்ப்பினை மேம்படுத்திடவும், அப்பொருட்களை சந்தைப்படுத்திடவும் கிராம அங்காடிகள், கல்லூரி சந்தைகள், மாவட்ட அளவிலான சாராஸ் கண்காட்சிகள், மாநில / தேசிய அளவிலான கண்காட்சிகள் என பல்வேறு கண்காட்சிகள் மூலமாக பிரபலப்படுத்தி மகளிரின் முன்னேற்றத்திற்காக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், அரசின் திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களைச் சார்ந்த மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்திடும் நோக்கிலும், விற்பனை வாய்ப்பினை மேம்படுத்திடும் வகையிலும், சென்னையில் பண்டிகை மற்றும் விடுமுறை காலங்களில் மாநில அளவிலான விற்பனை கண்காட்சிகள் மூலமாக பல்வேறு விற்பனை வாய்ப்புகளை மகளிர் குழுக்களுக்கு ஏற்படுத்தி தருகிறது.

அதன் தொடர்ச்சியாக, சென்னை, நுங்கம்பாக்கம், வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலையில் உள்ள அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் மகளிர் மேளா **"கிறிஸ்துமஸ் – புத்தாண்டு – பொங்கல்"** விழாக்கால விற்பனைக் கண்காட்சி மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிப்புகளின் விற்பனை மையத்தினை (கியாஸ்க்) மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள் குத்துவிளக்கேற்றி இன்று (19.12.2014) தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவுத் துறை அமைச்சர் திருமதி. பா. வளர்மதி அவர்கள், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திருமதி. எஸ். கோகுல இந்திரா அவர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அரசு செயலாளர் திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., அவர்கள் மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி வே. அமுதவல்லி, இ.ஆ.ப., அவர்கள், மகளிர் திட்டம் மற்றும் புதுவாழ்வு திட்டம் ஆகியவற்றின் கூடுதல் இயக்குனர்கள் ஆகியோர் இத்தொடக்க விழாவில் கலந்து கொண்டு சிறப்பு செய்தனர்.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்த இவ்விற்பனைக் கண்காட்சி 19.12.2014 முதல் 11.01.2015 வரை, காலை 10.30 மணிக்கு தொடங்கி மாலை 8.30 மணி வரை நடைபெறும். அனைத்து பண்டிகை விடுமுறை நாட்கள் மற்றும் சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமைகளிலும் இக்கண்காட்சியில் விற்பனை நடைபெறும்.

இக்கண்காட்சியில் 32 மாவட்டங்களில் செயல்படும் மகளிர் திட்டம், புது வாழ்வுத் திட்டம், சுனாமிக்குப் பிந்தைய வாழ்வாதாரத் திட்டம் (IFAD) மற்றும் மாற்றுத் திறனாளிகள் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 110 குழுவினர் 55 விற்பனை அரங்குகளை அமைத்திருந்தனர். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சுய உதவிக் குழுவினர் அமைத்திருந்த அரங்குகளை பார்வையிட்டு மகளிர் சுய உதவிக்குழு பெண்களிடம் அவர்கள் விற்பனைக்கு வைத்திருந்த பொருட்கள் குறித்து விவரங்கள் கேட்டறிந்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பெண்களுக்காக மேற்கொண்டுவரும் பல்வேறு பணிகள் மற்றும் திட்டங்கள் குறித்து அவர்களிடம் தெரிவித்தனர்.

மகளிர் மேளா ‘‘கிறிஸ்துமஸ் – புத்தாண்டு – பொங்கல்’’ விற்பனை கண்காட்சியில் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் பிரத்யேக தயாரிப்புகள் விற்பனைச் செய்யப்படுகிறது. குறிப்பாக, உணவு பொருட்கள், மரச்சிற்பங்கள், ஆபரண வகைகள், சணல் பொருட்கள், வீட்டு உபயோகப் பொருட்கள், புடவை வகைகள், கைத்தறி துணி வகைகள், கைவினைப் பொருட்கள், மென் பொம்மைகள், தேங்காய் நார் பொருட்கள், மலைப்பிரதேச பொருட்கள், இயற்கை தானிய வகைகள், மணி மாலைகள், கிளிஞ்சல்கள், உலோகப் பொருட்கள், பனை ஓலைப் பொருட்கள், மெழுகுவர்த்திகள், பத்தமடை பாய் வகைகள் மற்றும் தோல் பொருட்கள் தரமாக தயாரிக்கப்பட்டு மலிவான விலையில் விற்பனைச் செய்யப்படுகிறது. இக்கண்காட்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் சென்னை மாவட்ட மகளிர் திட்ட அலுவலர் திருமதி. சினேகலதா அவர்கள் செய்திருந்தார்.

சென்னை மாநகரில் வசிக்கும் அனைத்து பொதுமக்கள், குறிப்பாக பெண்கள், இளைஞர்கள் மாணவ–மாணவிகள் மற்றும் குழந்தைகள் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களின் விழாக் கால கண்காட்சிக்கு வருகை புரிந்து புதிய தரமான பொருட்களை வாங்கி கிறிஸ்துமஸ், புத்தாண்டு மற்றும் பொங்கல் பண்டிகைகளை சிறப்பாக கொண்டாடி மகிழ வேண்டும் என தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**